மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 4 ஏப்ரல் 2020



தேசப்பிதா ஜார்ஜ் வாஷிங்டன் செய்திபக்கம் - 2

ஜார்ஜ் வாஷிங்டன் கல்லறையின் வாசகம்




“நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்” [யோவான் 11:25,26]

அட்டைப்படச் செய்தி:

# "தேசப்பிதா" ஜார்ஜ் வாஷிங்டன்



ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி (First President of united States). 13 தனித்தனியாகக் காலனி ஆட்சியிலிருந்த நாடுகளைப் புரட்சி யுத்தத்தின் மூலமாக (Revolutionary war) ஒன்றுபடுத்திய பெருமை அவரைச் சாரும். அந்த யுத்தகாலத்தில் ஜார்ஜ் வாஷிங்டனே இராணுவத் தளபதியாக இருந்தார். ஆகவே அந்த தேசத்தில் அவருக்கு "தேசப்பிதா" (Father of the Country) என்ற பட்டத்தை மக்கள் அளித்தனர். முதல் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கும்போது எந்தப் போட்டியுமின்றி ஏக மனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அதற்குப் பின்னரும் இரண்டாவது முறையாக அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். மூன்றாவது முறையும் மக்கள் அவரையே ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்க வற்புறுத்தியும் அவர் அதிபர் தேர்தலுக்கு நிற்க மறுத்துவிட்டார். அவர் ஓய்வு எடுத்த காலத்தில் அவரது குடும்பத்திற்குச் சொந்தமான "வெர்னான் மலையில்" (Mount vernon) அவர் தங்கினார். அவர் தன்னுடைய சரீரத்தில் பலவிதமான வேதனைகளையும் பாடுகளையும் சந்தித்தார். அவர் தன்னுடைய 67ஆவது வயதில் மரணமடைந்தார். மூன்றுநாட்கள் வரை அவருடைய சரீரம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து பார்வையிட்டனர். அவருடைய விருப்பத்தின்படியே அவர் வாழ்ந்த அதே மலையில் அடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய விருப்பத்தின்படியே ஆங்கிலிக்கன் சபைகளின் கூட்டமைப்பின் (Episcopel Church) ஜெபப் புத்தகத்திலிருந்து குறிப்பிட்ட பகுதிகள் வாசிக்கப்பட்டன. மெல்லிய பாடல்கள் இசைக்கப்பட்டன. அட்டைப்படத்தில் அவருடைய கல்லறையைக் காணலாம். அவரது கல்லறை வாசகத்தில் (Epilaph) அவர் விரும்பிய வசனமே பொறிக்கப்பட்டது.

**"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,**
**என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்,**
**உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும்**
**என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்"** (யோவான் 11:25,26)

இந்த வசனங்களை அவரே விரும்பி எழுதச் சொல்லியிருப்பாரானால் உண்மையிலேயே "நானும் இயேசுவைப் போல உயிர்த்தெழுவேன்" என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்திருக்க வேண்டும். இந்நம்பிக்கை போற்றுதற்குரியது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்டர் தினத்தைக் கொண்டாட இருக்கிற நாம் நமது நம்பிக்கை எப்படியிருக்கிறது என்பதை சுய ஆய்வு செய்து தகுதிப்படுத்திக் கொள்ளும் காலம் இது.

நன்றி: இணையதளச் செய்தி.

## எமது புதிய வெளியீடுகள்










**"கர்த்தர்.. உன் வழிகலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" [சங்.91:11]**



**மலர் - 18 ஏப்ரல் - 2020 இதழ் - 4**

**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 3 |
| 2. | ஊஹான் 400 | 5 |
| 3. | தேவன் சத்தியத்தைக் காண்கிறார்.... | 8 |
| 4. | நீதிமன்றச் செய்தி | 14 |
| 5. | கீழ்ப்படிவோம் | 15 |
| 6. | அன்பு அற்றுப்போனதேன்? | 19 |
| 7. | கிறிஸ்தியானின் மோட்ச... பாகம் 9 | 23 |
| 8. | தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் | 27 |
| 9. | செய்திகள் .... | 2, 18 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, "தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

# "உங்களுக்குச் சமாதானம்" (யோவா.20:19)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்,

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவர் கொல்லப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாவது நாள் உயிர்த்தெழுந்து கல்லறையை விட்டு வெளியே வந்தார். இது உலக வரலாற்றில் நடந்த தனித்தன்மை வாய்ந்த (Unique) சம்பவம். தமது கொடிய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் தமது வாயினாலேயே அவர் வாழ்ந்த காலத்தில் சீடர்களுக்குப் போதிக்க ஆரம்பித்தார் (மாற்.8:31). எருசலேமில் பிரதான ஆசாரியனிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புவிக்கப்படுவார் என்றும் அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர் மேல் துப்பி அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடு எழுந்திருப்பார் என்பதையும் அவரது வார்த்தைகளாலேயே முன்னுரைத்தார் (மாற்.10:34). அவர் சொன்னது போலவே அப்படிப்பட்ட இழிவுச் சாவை சந்தித்தார். அவர் சொன்னபடியே மரணத்தை மேற்கொண்டு உயிர்த் தெழுந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் "மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்" என்று இவற்றையெல்லாம் உள்ளடக்கி (ரோம.1:5)ல்

மிகச்சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார். வேதத்தில் சொல்லப்பட்டவை நிறைவேறு மளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று அவர் சொன்ன வார்த்தை துல்லியமாக நிறைவேறிற்று (மத்.5:18).

பரிசேயரும் வேதபாரகர்களும், பிரதான ஆசாரியனும் மற்றும் யூதர்களும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் அவரது முடிவு என்று எண்ணி னார்கள். ஆனால் அவரது நித்திய வாழ்வின் தொடக்கம் என்பதை அறியாமற் போனார்கள். ஆகவேதான் பத்மு தீவில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தரிசனமாகிய இயேசுகிறிஸ்து **"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங் களிலும் உயிரோடிருக்கிறேன்"** என்று பிரகடனப்படுத்தினார் (வெளி.1:18).

உயிர்த்தெழுந்த இயேசு தமது சீடர்களுக்குத் தரிசனமாகி முதலாவது சொன்ன வார்த்தை "உங்களுக்குச் சமாதானம்" (Peace be with you) என்றார் (யோவா.20:19). ஏனெனில் அவர்கள் யூதர்களுக்குப் பயந்து, கதவைப் பூட்டி பீதியில் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவேதான் **"உங்களுக்குச் சமாதானம்"** என்று சொன்னார். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி **"உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக, பிதா என்னை அனுப்பினது போல நான் உங்களை அனுப்புகிறேன்"** என்ற அதிகாரத்தைக் கொடுத்து (Endovement of authority) ஊழியத்தைத் தொடரக் கட்டளையிட்டார்(வ.21). அன்று முதலாம் நூற்றாண்டில் இயேசு சொன்ன வார்த்தைகள் இன்று 21ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கும் பொருந்தும். இயேசுவை தரிசித்து இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அவர்கள் சந்தோஷப்பட்டார்கள் என்று காண்கிறோம்(வ.20). **"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை"** என்று (சங்.16:8)ல் தாவீது சொல்வதுபோல நாமும் அவரை நமது தரிசனத்தில் (Vision) முன்நிறுத்திக் கொண்டு "நான் அசைக்கப்படுவதில்லை" என்ற பற்றுறுதியோடும் (Confidence) தைரியத் தோடும் (Courage) உற்சாகத்தோடும் (Enthusiasm) நமது ஊழியப் பணியைத் தொடருவோம். **"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"** (lo, I am with you always, even to the end of the age) என்ற வாக்குறுதி எவ்வளவு விசேஷமானது(மத்.28:20). அதை நமது சிந்தையிலும் இருதயத்திலும் பதித்துக் கொள்வோமானால் அது நமக்குள்ளிருந்து நம்மை ஊக்குவித்துக் கொண்டேயிருக்கும். வாக்களித்தவர் மாறாதவர்.

இரண்டாவதாக சீடர்களுக்குச் சொன்ன வார்த்தை **"அவிசுவாசியா யிராமல் விசுவாசியாயிரு"** (Do not be unbelieving but believing) (யோவா.20:27)ல்

22ஆம் பக்கம் பார்க்க...



# ஊஹான் 400

## நுண்மங்களை (Germ) உள்ளடக்கிய போராயுதம் (Biological Weapon of War)

மனித ஞானம், மனுக்குலம் வளம்பெற, முன்னேற்றப் பாதையில் வழிநடத்த, நாகரீகத்தில் மேம்பாடு அடைய, உலக மக்கள் அனைவரும் நல்லிணக்கத்தோடு வாழ வழி வகை செய்யாமல் முழு மனுக்குலத்தையும் எந்த வகையிலேனும் கொடூர ஆயுதங்களை கண்டுபிடித்து அழிக்கவே பலகோடி பணத்தை செலவழித்து குறுகிய வன்மைப் புத்தியோடு விஞ்ஞானிகள் போட்டி போட்டு பிரயாசப்பட்டு வருகின்றனர். இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய பெருநகரங்கள் அவற்றில் வாழ்ந்த மக்களோடு அழிக்கப்பட்டன. முன் உதாரணமாக நிற்கின்றது. அழிவுக்குத் தப்பிய சிறுகூட்ட மக்கள் அணுகுண்டின் கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டும், சரீரத்தில் செய லிழந்தும் (Physically invalids) போயினர். இன்றும் அப்பட்டணங்கள் அழிவுச் சின்னங்களாக மனுக்குலத்திற்கு நினைப்பூட்டு கிறவைகளாக நிற்கின்றனவே. இரண்டு உலக மகா யுத்தங்களின் பேரழிவை அறிந்திருந்தும் உலக நாடுகள் அழிவிற்குரிய ஆயுதங்களை தயாரித்து குவித்து வைத்துக் கொண்டிருக்கும் அவலநிலையைக் காண்கிறோம். அவைகள் எப்பொழுது வெடிக்கும் என்ற அச்சத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டை ஆளும் தலைவர்களுக்கோ அதைப்பற்றிய கவலையிருப்பதாகத் தெரியவில்லை. நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்?

அநேக இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் மனுக்குலம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நல்ல நாகரிகமாக வாழ்ந்திருக்கின்றனர் என்று பெருமை பாராட்டிக் கொள்ளும் மக்கள், சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் நாகரிகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறோமா அல்லது தாழ்ந்து கொண்டிருக்கிறோமா?

“உலகத்தை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்” என்ற தலைப்பில் எழுதப்பட்ட செய்தியை கடந்த இதழில் (மார்ச் 2020) படித்தது உங்கள் நினைவிலிருக்கும் என்று நம்புகிறேன், இல்லாவிட்டால் மீண்டும் ஒருமுறை படியுங்கள். இந்த கொரோனா வைரஸ் காரணமாக 114 நாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு (World Health Organisation) அறிவித்துள்ளது. உயிரிழப்பு பல ஆயிரங்களாக, பாதிப்பு இலட்சத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றன என்றும் அறிவித்துள்ளது.




**இருளின் கண்கள்**
**(The Eyes of Darkness)**

இந்த சூழ்நிலையின் மத்தியில் கொரோனா வைரஸ் போன்ற உயிர்க்கொல்லி தொற்றுநோயைக் குறித்து 1981ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவைச் சேர்ந்த டீன் கூன்ட்ஸ் (Dean koontz) என்ற பிரபல எழுத்தாளர் எழுதிய "இருளின் கண்கள்" (The eyes of darkness) என்ற நாவலில் குறிப்பிட் டுள்ளார். இது நமக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இந்த நாவலில் லீ சென் (Li chen) என்ற சீன விஞ்ஞானி அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்ததாகவும், அவர் வைத்திருந்த டிஸ்கட் ரிக்கார்டு படி சீன ராணுவ ஆய்வகத்தைப் பற்றி அதில் கூறப்பட்டுள்ளது. ஊகானில் அமைக்கப்பட்டுள்ள அந்த இராணுவ ஆய்வகம், போர்க்காலத்தில் உயிரியல் ஆயுதமாக (Biological weapon) பயன்படுத்த புதிய வைரஸ் தயாரிப்பு ஒன்றில் ஈடுபவதாகவும் அதற்கு "ஊஹான் 400" என்று பெயரிட்டிருப்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. சுமார் 38 ஆண்டு களுக்கு முன்பாகவே இப்படிப்பட்ட தகவல்கள் நாவலில் இடம் பெற்றி ருப்பது நமக்கு வியப்பாக இருக் கிறது. இப்போது அது உண்மை யாய் மாறியிருப்பது ஆச்சிரியத் திலும் ஆச்சரியமாயிருக்கிறது.

**நாட்களின் முடிவு (End of Days)**

2008ஆம் ஆண்டு அமெரிக்கா வைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் சில்வியா பிரவுண் (Sylvia Brown) என்ற அம்மையார் "நாட்களின் முடிவு" என்ற நாவலை எழுதி யுள்ளார்கள். அதில் உலகத்தின் முடிவைக் குறித்த முன்னறிவிப்பும் தீர்க்கதரிசனமும் (Prediction and Prophecies about the end of the World) என்ற குறுந்தலைப்பில், 2020 ஆண்டுவாக்கில் நிம்மோனியா போன்றதொரு கொடிய நோய் உலகம் முழுவதும் பரவும் என்றும் எந்த மருந்திற்கும் அடங்காததாய் மிகப் பெரிய எண்ணிக்கையிலான உயிரிழப்புகளையும் பாதிப்புகளையும் உண்டாக்கும் என்றும் தீர்க்கதரிசனம் போல அப்புத்தகத்தில் குறிப்பிட் டுள்ளார்கள். அது நுரையீரலையும் மூச்சுக்குழாயையும் பாதிக்கும் என்றும் திடீரென்று உலகத்தைப் பாதித்த அந்த நோய் நின்றுவிடும் என்றும், ஆனால் பத்து ஆண்டுகள் கழித்து அதே போன்ற நோய் தோன்றி பின்னர் மறையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். உலகம் முழு வதும் நடக்கும் இந்த உயிரிழப்புச் சம்பவங்களையும் இது போன்ற முன்னறிவிப்புகளையும் காண்பது ஆச்சரியமாயிருக்கிறது. "நாட்களின் முடிவு" என்ற தலைப்பிலான நாவலில் சொல்லப்பட்டிருக்கும்

தகவலையும் உலகில் இப்பொழுது நடந்துவரும் சம்பவங்களை யெல்லாம் உற்று நோக்குகிற போது உண்மையிலேயே நாம் உலகத்தின் கடைசி நாட்களுக்கு வந்திருக்கிறோம் என்பதை விளங்கிக் கொள்ளு கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நோவாவின் காலத்தில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்" என்று சொன்னார்(லூக்.17:26). நோவாவின் காலத்தில் நடந்த சீர்கேடுகளில் முக்கியமானது "பூமி கொடுமையினால் (violence) நிறைந்திருந்தது" என்று (ஆதி.6:11)ல் காண்கிறோம். உலக நாடுகளிளெல்லாம் ஏதேனும் காரணத்தைக் கொண்டு பயங்கரவாதச் சம்பவங்கள் (Terrorism Activities) பெருமளவில் நடந்து கொண்டேயிருக்கின்றன. அன்று ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டதுபோல உலகம் அக்கினிக்கிரையாக வைக்கப்பட்டிருக்கிறது (2 பேது.3:7,10,11).

இஸ்ரவேல் மக்களின் வனாந்திரப் பயணத்தின் போது தேவனால் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்ட தேவ ஊழியர்களாகிய மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக இஸ்ரவேல் மக்கள் செயல்பட ஆரம்பித்தார்கள். தேவ கோபாக்கினை அவர்கள் மீது எழும்பியது. எதிர்த்து நின்ற தலைவர்கள் கோராகு, தாத்தான், அபிராம் உட்பட 250 பேரை பூமி திறந்து அவர்களை விழுங்கிப் போட்டது. அதைக் கண்ட இஸ்ரவேல் மக்கள் மீண்டும் மோசே, ஆரோன் ஆகியோர் மீது கோபமடைந்தனர். கர்த்தர் மோசேயையும் அவனைச் சார்ந்தவர்களையும் விலகிப் போகச் சொல்லிவிட்டு பதினாயிரத்து எழுநூறு பேரை வாதையினால் (தொற்று நோயால்) கொன்றுபோட்டார். இதைக் கண்ட மோசே மக்களுக்காக மனதுருகி ஆரோனை, தூபகலசத்தைக் கையிலேந்திக் கொண்டு செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே ஓடிப் போய் நில் என்றார். ஆரோன் மோசே சொன்னபடியே போய் நின்றான். வாதை நின்றுபோயிற்று (எண்.16:21-43). மோசே மக்களுக்காக மன்றாடும் போது **"தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார் மேலும் கடுங்கோபங்கொள்வீரோ"** என்று முகங்குப்புற விழுந்து மன்றாடியது போல (வ.22) அழிந்து போய்க் கொண்டிருக்கிற மக்களுக்காக மன்றாடி ஜெபிக்க மோசேக்கள் எழும்ப வேண்டும். செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே தூபகலசத்தோடு (ஜெப விண்ணப்பத்தோடு) ஓடிப் போய் நிற்க ஆரோன்கள் தேவை. அப்படிச் செய்வோமானால் உலகம் முழுவதும் பரவி அநேகரை விழுங்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் என்ற வாதை நிற்கும். நம்முடைய ஜெபங்களுக்கு இரங்கி, அவர் கட்டளையிட அது நிற்கும். ஜெபிக்க ஒன்று படுவோம். ஆண்டவர் இரங்குவார். ●

# தேவன் சத்தியத்தைக் காண்கிறார், ஆனால் காத்திருக்கிறார் (God sees the truth but waits)

லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) மிகச் சிறந்த எழுத்தாளர், நாவலாசிரியர், சிறுகதைப் படைப்பாளர். ரஷ்ய தேசத்தில் விலாடிமர் என்ற நகரில் வாழ்ந்து வந்தவர். கிரிமியன் யுத்தத்தின்போது இராணுவத்தில் லெப்டினன்டாகப் பணியாற்றியவர். அவர் 1829-ல் எழுதிய "யுத்தமும் சமாதானமும்" (War and Peace) என்ற படைப்பும், "தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள்ளிருக்கிறது" (The kingdom of God is within you) என்ற நாவலும் உலகப் பிரசித்தி பெற்றவை. மேற்குறிப்பிட்ட இரண்டு நாவல்களும் மகாத்மா காந்தி, மார்ட்டின் லூத்தர் கிங் ஆகியோரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூகம் மற்றும் அரசியல் வாழ்விலும் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கியதாக அவர்களே சொன்னதாகச் அறியப்படுகிறது.

அவர் எழுதிய சிறுகதைகள், கருத்தாழமிக்கதாயும், வாசிப்போர் கேட்போரின் நெஞ்சம் நெகிழத்தக்கதான உணர்வைத் தூண்டி மாற்றத்தை உண்டாக்கத்தக்க ஆற்றலுள்ளவைகளாயுமிருக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று **"தேவன் சத்தியத்தைக் காண்கிறார், ஆனால் காத்திருக்கிறார்"** (God sees the truth but waits) என்ற தலைப்பிலான சிறுகதை.

கதையின் சுருக்கம் இதுதான். ஐவான் டிமிட்ரிச் அக்சினோவ் (Ivan Dimitrich Aksionov) ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர். தன்னுடைய வாலிப நாட்களில் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர். அதன் விளைவாகக் குடும்பத்தினரால் நிராகரிக்கப்பட்டவராக வாழ்ந்தார். ஆனால் திருமணம் ஆனபின் தன்னுடைய நடக்கையை மாற்றிக் கொண்டார். அவருடைய மனைவி அவருடைய பழைய வாழ்க்கை முறையை அறிந்திருந்தாலும் அவரை மிகவும் நேசித்தாள். அக்சினோவ் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார். எப்பொழுதும் மகிழ்ச்சியோடு பாடுவதும், மற்றவர்களோடு சிரித்து பழகுகிறவருமாயிருந்தார். சிறு வியாபாரம் ஒன்றை நடத்தி தன் குடும்பத்திற்குத் தேவையான வருமானம் ஈட்டிவந்தார். அவருக்கு இரண்டு கடைகளும் ஒரு குதிரைவண்டியும் இருந்தன.

ஒரு நாள் அக்சினோவ், நெஜினி என்ற நகருக்கு வியாபாரக் காரியமாகப் புறப்பட்டுச் சென்றார். அவ்வாறு புறப்பட்டபோது அவருடைய மனைவி அவரைத் தடுத்து நிறுத்தி "நான் ஒரு கெட்ட கனவு கண்டேன். நீங்கள் வியாபாரத்திற்குப் போய் விட்டுத் திரும்பி வரும்போது உங்கள் தலைமயிர் முற்றுமாக நரைத்து முதிர் வயதினரைப் போல் இருந்

தீர்கள். அந்த கனவு எனக்கு மன உளைச்சலைத் தருகிறது. நீங்கள் இன்று போக வேண்டாம்'' என்று கூறினாள். அக்சினோவ் வழக்கம் போலவே சிரித்துக்கொண்டு ''பயப் படாதே, அது கெட்ட கனவு அல்ல, நரைமயிர் ஒரு நல்ல அதிர்ஷ்டமான அறிகுறிதான். வியாபாரம் நல்ல லாபகரமாக முடியும். நான் வரும் போது உனக்கு நல்ல வெகுமதிகளை வாங்கிக் கொண்டு வருவேன்'' என்று கூறி புறப்பட்டுச் சென்றார்.

போகும்வழியில் ஓர் இரவு, சத்தி ரத்தில் தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு தற்செயலாக அவருக்கு அறிமுகமான ஒரு வியா பாரியைச் சந்தித்தார். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அக்சினோவ் அவருடைய அறையிலேயே தங்கினார். அக்சினோவ் அதி காலையில் எழுந்துவிட்டார். அந்த வியாபாரி படுக்கையிலிருந்து எழுந் திருக்கவில்லை. எனினும் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று எண்ணி அக்சினோவ் தன்னுடைய குதிரைவண்டியை ஆயத்தம் செய்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

அக்சினோவ் தான் சென்றடைய வேண்டிய நெஜினி நகருக்கு இடை யிலேயே மூன்று குதிரைகள் பூட்டிய குதிரைவண்டியில் போலீஸ் அதி காரியும் அவரோடு வந்த காவலர் களும் வந்து அக்சினோவை தடுத்து நிறுத்தி அவரை ஏதோ குற்ற வாளியைப்போல கருதி கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டனர். நீ எங்கிருந்து வருகிறாய்? நேற்று இரவு எங்கு தங்கினாய்? யாரோடு தங்கினாய்? ஏன் உன்னோடு தங்கிய வரோடு சொல்லாமல் ஏன் அதி காலையில் புறப்பட்டுச் சென்றாய்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுத் துளைத்தனர். இதுபோன்ற கேள்விகளால் அதிர்ச்சியடைந்த அக்சினோவ் ''ஏன் என்னை இப்படிக் கேட்கிறீர்கள்? நான் என்ன திருடனா? கொள்ளைக்காரனா? என்று கேட்ட போது, அந்த அதிகாரி ''நீ நேற்று இரவு உன்னோடு தங்கியிருந்த வியாபாரியைக் கழுத்தை அறுத்து கொலை செய்து அவரிடமிருந்த பணத்தையும் கொள்ளையடித்து விட்டு வந்திருக்கிறாய் என்று சந்தேகப் படுகிறோம் என்ற அபாண்டமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அக்சி னோவ் அதிர்ந்து போனார். தான் ஒரு பாவமும் அறியாதவன் என்று எவ்வளவோ மன்றாடினார். ''உன் னுடைய பொருட்களையெல்லாம் சோதிக்க வேண்டும்'' என்று சொல்லி காவலர்களை வைத்து சோதித்தபோது அக்சினோவுடைய ஒரு மூட்டையில் ஈரம் கூட மாறாத இரத்தக்கறை படிந்த கத்தியொன்று (Knife stained with fresh blood) கண்டுபிடிக்கப்பட்டது. அக்சினோவ் பயந்து திகைத்துப்போனான். இரத்தக் கறை படிந்த கத்தியைக் குறித்து கேள்வி கேட்டபோது ''எனக்குத் தெரியாது...கத்தி என்னுடையதல்ல'' என்று பதட்டத்தோடு பதில் சொன் னான். கொலை செய்யப்பட்ட வியா பாரிகள் அறையில் உன்னைத் தவிர

வேறு யாருமில்லை. “நீ தான் கொலை செய்திருக்கிறாய். இந்த இரத்தக் கறை படிந்த கத்தியே அதற்கு சாட்சி” என்றார் அந்த அதிகாரி. மேலும் அந்த அறை உட்பக்கமாகப் பூட்டியிருக்கிறது. அதை நீ சாமர்த்தியமாய் செய்திருக்கிறாய் என்று அந்த அதிகாரி சொன்னார். அதிகாரி அவரைக் கைது செய்து அவர்களது குதிரை வண்டியில் ஏற்றிச் சென்றனர். அவரை சிறையிலடைத்தனர். விசாரணை முடித்து அக்சினோவ் வியாபாரியைக் கொலை செய்து 20ஆயிரம் ரூபிள்ஸ் பணத்தை கொள்ளையடித்து விட்டான் என்று நீதிமன்றத்தில் நிறுத்தினர். சுற்றுச் சூழல் சாட்சியத்தின் (Circumstantial Evidence) அடிப்படையில் சாகும் வரை ஆயுள்தண்டனை (Life sentence till death) தீர்ப்பு வழங்கப் பட்டது.

இதை அறிந்த அக்சினோவின் மனைவி பெரும் அதிர்ச்சிக்குள் ளானாள். தன் குழந்தையை அழைத்துக் கொண்டு கைக் குழந்தையையும் எடுத்துக் கொண்டு சிறைக்கு அக்சினோவைப் பார்க்கச் சென்றாள். தான் நேசித்தக் கணவனை கைதி உடையில் சிறையிலிருப்பதைக் கண்டு மயங்கி விழுந்து விட்டாள். அவள் சுயநினைவுக்கு வந்தபின் அக்சினோவிடம் எல்லா காரியங்களையும் கேட்டறிந்தாள். குற்றம் செய்யாத ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது (No innocent should be punished) என்ற கோட்பாடிருக்க இது எப்படியாயிற்று என்று அக்சினோவ் புலம்பினார். கடைசியாக தன் மனைவியிடம் சார் (Czar) மன்னருக்கு முறையீடு செய்ய அறிவுரை கூறி அனுப்பினார். அப்படி செய்த முறையீடும் நிராகரிக்கப்பட்டது. இதை தன் மனைவி மூலம் அறிந்து கொண்டார். பின்னர் சைபீரியாவிலுள்ள கொடிய சிறைக்கு மாற்றப் பட்டார். இருந்த ஒரே நம்பிக்கையும் போய்விட்டது.

இப்பொழுது அவனது கண்ணோட்டம் தேவன் பக்கமாகத் திரும்பியது. அவன் தேவனை நோக்கி முறையிட ஆரம்பித்தான். “ஆண்டவரே, உண்மை என்ன என்பது உமக்குத் தெரியும். நான் உம்மிடத்தில் உம்முடைய இரக்கத்தை எதிர்பார்க்கிறேன்” என்று மன்றாடினார். ஆண்டுகள் உருண்டோடின. 26 ஆண்டுகளாயிற்று. அவனது மனைவியும் இறந்துவிட்டாள் என்ற செய்தியறிந்தார். தன் பிள்ளைகளைக் குறித்த எந்த தகவலும் இல்லை. அவர்கள் ஒருவேளை தன்னை மறந்து போயிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான். இப்பொழுது அவனது தலை நரைத்து விட்டது. நீண்ட தாடி, மெலிந்த உடல், முதுகு கூன் விழுந்துவிட்டது. நடை தளர்ந்து விட்டது. பேச்சும் குறைந்து விட்டது. பழைய சிரிப்பும் மறைந்து போயிற்று. ஆனாலும் சிறை நூலகத்திலிருந்து “வேதாகமம்” மற்றும் “புனிதர்களின் வரலாறு” (The lives of saints) என்ற புத்தகங்களை வாங்கி ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். வார்த்தைகளை

தியானிப்பதும் ஜெபிப்பதுமே அவரது நாட்டமாக இருந்தது. சிறை அறையிலுள்ள மங்கிய வெளிச்சத்திலும் சிரமங்கள் மத்தியிலும் வேதத்தை வாசிப்பதில் தவறுவதில்லை. அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. சிறைவாசிகளுக்குள் ஏதேனும் பிரச்சனை, சச்சரவு என்றால் அக்சினோவ் தலையிட்டு அவர்களை சமரசம் செய்து வைப்பார். இதன் காரணமாக சிறை அதிகாரிகளும் இவர் மீது நல்மதிப்பு வைத்தனர். சிறைவாசிகள் அக்சினோவை ''தாத்தா'' (Grandpa) என்றும் ''புனிதர்'' (Saint) என்றும் அன்போடு அழைக்க ஆரம்பித்தனர்.

ஒருநாள் அக்சினோவ் இருந்த சிறைக்குப் புதிதாக சில கைதிகள் கொண்டுவரப்பட்டனர். பொதுவாக புதிதாக வந்த கைதிகளிடம் அவரவர்கள் செய்த குற்றங்கள் குறித்தும், தண்டனை காலம் குறித்தும் சிறையிலிருப்பவர்கள் விசாரிப்பார்கள். அதை அனைவரும் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அக்சினோவும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பார். 60வயது மதிக்கத்தக்க, நல்ல திடக்கார்த்தமாக இருந்த ஒரு மனிதன் அவன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் ஒரு குதிரையைத் திருடியதாக பொய் வழக்குப் போட்டு என்னை சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். நான் திருடியதாகச் சொல்லப்பட்ட குதிரை என் நண்பனுடையதுதான். நான் சீக்கிரம் வீட்டிற்கு வர வேண்டுமென என் நண்பனிடம் சொல்லாமல் குதிரையை அவிழ்த்து வந்தேன். வீட்டில் இறங்கி விட்டு குதிரையை அனுப்பிவிட்டேன் என்று சொல்லியும் கேட்காமல் என்னை சிறைக்கு அனுப்பிவிட்டார்கள் என்றான். நான் இந்த குற்றத்தை செய்யவில்லைதான். ஆனால் முன்பு ஒரு வியாபாரியை கொலை செய்தேன். அதில் நான் தப்பிவிட்டேன். அந்தத் தண்டனையை இப்பொழுது அனுபவிக்கிறேன் என்று சொன்னான். மேலும் சிறைக்கைதிகள் அவனை விசாரித்த போது அவனது சொந்த ஊர் விலாடிமர் என்றும் தன்னுடைய பெயர் மகார் செமியோனிச் (Maker semyonich) என்றும் சொன்னான். விலாடிமர் நகரைச் சேர்ந்தவன் என்று சொன்னவுடனேயே அக்சினோவின் கவனம் அவன் பக்கமாகத் திரும்பியது. அக்சினோவ் அவனிடம், ''விலாடிமரில் அக்சினோவ் என்ற வியாபாரியை உனக்குத் தெரியுமா? அவனது குடும்பத்தாரைத் தெரியுமா'' என்று ஆர்வத்தோடு கேட்டார். ''நேரடியாகத் தெரியாது. கேள்விப்பட்டிருக்கிறேன். அவரது குடும்பத்தார் வசதியானர்கள். அக்சினோவ் சைபீரியாவிலிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரும் நம்மைப்போல ஒரு குற்றவாளிதான் போலும்'' என்று பதிலுரைத்தான். மகார் ''நீங்கள் என்ன குற்றம் செய்து இங்கு வந்தீர்கள்?'' என்று அக்சினோவைக் கேட்டான். ஆனால் அக்சினோவ் எதையும் விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. எனினும் மற்ற சிறைக் கைதிகள் இவர் ஒரு வியாபாரி

கொலை செய்யப்பட்ட வழக்கில் இவரது மூட்டையில் இரத்தக் கறை படிந்த கத்தி கண்டுபிடிக்கப்பட்டு இவர்தான் கொலையாளி என்று தீர்ப்பாகி சிறையிலிருக்கிறார்" என்று சொன்னார்கள். இதை அறிந்த மாத்திரத்தில் மகார் செமி யோனிச் அக்சினோவை ஆச்சரியத் தோடு பார்த்தான். அக்சினோவுக்கு இவன்தான் அந்த கொலைக்கு பொறுப்பாக இருப்பானோ என்று சந்தேகப்பட்டார். "அந்த கொலை யாளியைப் பற்றி உனக்குத் தெரியுமா?" என்று அந்தக் கொலையைப் பற்றிக் கேட்டதற்கு அந்தக் கொலையாளி அக்சினோ வின் பையிலிருந்த கத்தியைக் கைப்பற்றி அவன்தான் கொலை யாளி (குற்றவாளி) என்று தீர்ப்பளிக் கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக் கிறேன் என்றான். மகார் பேசிய தன்மையிலிருந்து இவன்தான் அந்த வியாபாரியைக் கொலை செய்தவன் என்று விளங்கிக் கொண்டார். அவன் மீது அக்சி னோவுக்கு மூர்க்க கோபம் வந்தது. அவனைப் பழிவாங்க வேண்டு மென்ற எண்ணம் மேலோங்கியது. இரவெல்லாம் அவருக்குத் தூக்கம் வரவில்லை. ஆனாலும் அந்த உணர்வுகளையெல்லாம் அக்சி னோவ் அடக்கிக் கொண்டு அமைதி யாக ஆண்டவரை நோக்கி ஜெபித்துக் கொண்டே இருந்தார். இப்படியாக இரண்டு வாரங்கள் கடந்து சென்றுவிட்டது.

ஒருநாள் இரவு மகார் செமி யோனிச் சிறை அறையிலிருந்து தப்ப ஒரு சுரங்கவழியைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பீரோ மறைவி லிருந்து உண்டாக்குவதை அக்சி னோவ் பார்த்துவிட்டார். இதை அறிந்த மகார் அக்சினோவின் இருகரங் களையும் பிடித்துக் கொண்டு "கிரான்ட்பா, இதை யாரிடமும் சொல்லிவிடாதே. தெரியவந்தால் சிறைஅதிகாரிகள் என்னை சவுக்கால் அடித்து சித்திரவதை செய்து கொன்று விடுவார்கள். அப்படி நீ என்னைக் காட்டிக் கொடுத்தால் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று மிரட்டி னான். அதற்கு அக்சினோவ் "நீ என்றோ என்னைக் கொலை செய்து விட்டாய். இன்னொருமுறை என்னைக் கொலை செய்ய வேண்டிய அவசிய மில்லை. ஆனால் நான் உன்னைக் காட்டிக் கொடுப்பதா இல்லையா என் பதை என் ஆண்டவர்தான் தீர்மானம் செய்ய வேண்டும்" என்றார். எனினும் சிறைக்கு வெளியே புதுமணல் கொட்டப்பட்டிருப்பதைக் கண்டு இந்த மணல் எங்கிருந்து வந்தது என்பதைக் கண்டுபிடிக்க திடீரென்று சிறை அறையை சிறை அதிகாரி சோதனை செய்தபோது சுரங்கப் பாதை தோண்டப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டது. விசாரணை நடத்தப்பட்டது. சக சிறைவாசிகள் தங்களுக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது என்று கூறி விட்டனர். "அக்சி னோவ் நீர் உண்மை பேசுகிறவர். இதை யார் செய்தது?" என்று அதிகாரி கேட்டார். அக்சினோவுக்கு மனதில் பெரும் போராட்டம். பழி வாங்குவதா அல்லது அப்படியே விட்டு விடுவதா அவனைத்

தண்டனைக்கு உட்படுத்துவதால் தனக்கு என்ன லாபம், என்பன போன்ற யோசனைக்குப் பின் அக்சினோவ் “நான் இதற்கு பதில் சொல்ல முடியாது. பதில் சொல்வது தேவனுடைய சித்தம் அல்ல. நான் உங்கள் கரத்திலிருக்கிறேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். என்னுடைய பதில் இதுதான்” என்று உறுதியாகச் சொன்னார். அந்த அதிகாரி என்ன நினைத்தாரோ விசாரணையை அதோடு நிறுத்திவிட்டார்.

அன்று இரவு அக்சினோவ் படுத்திருக்கும்போது தனது படுக்கை அருகில் யாரோ உட்கார்ந்திருந்ததைக் கண்டார். மங்கிய கொஞ்ச வெளிச்சத்தில் அது மகார் செமியோனிச் என்பதைப் புரிந்துகொண்டார். “நீ எழுந்து போய்விடு. நீ ஏன் என் பக்கத்தில் அமர்ந்திருக்கிறாய்?” என்றார். அதற்கு மகார் செமியோனிச், அக்சினோவின் காதருகே மெல்லிய சத்தத்தில் அக்சினோவ் என்னை மன்னித்துவிடு” (Aksionov, Forgive me) என்றான். மேலும் “அந்த வியாபாரியைக் கொலை செய்து அவனது பணத்தைக் கொள்ளையடித்தது நான்தான். உன்னையும் கொலை செய்ய வேண்டுமென்று நினைத்த போது வெளியே ஏதோ சத்தம் கேட்டபடியால் கத்தியை உன்னுடைய லக்கேஜ்க்குள் வைத்துவிட்டு ஜன்னல் வழியாகத் தப்பிவிட்டேன். இந்த வாக்குமூலத்தை நான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சொல்ல நான் ஆயத்தமாயிருக்கிறேன். நீ எப்படியாவது விடுதலையாகி உன் குடும்பத்தாரிடம் செல்லவேண்டும்” என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதான். “அக்சினோவ், நான் மிகக் கொடிய அக்கிரமக்காரன். இயேசுவினிமித்தமாக என்னை நீ காட்டிக் கொடுக்கவில்லை. இப்பொழுதாவது கிறிஸ்துவின் நிமித்தம் என்னை மன்னித்து விடு” என்று தரையில் தலையை மாறிமாறி மகார் முட்டினான். இதைக் கண்ட அக்சினோவும் அழ ஆரம்பித்தார். “நான் உன்னைவிட நூறுமடங்கு மோசமானவன்தான். ஆனால் ஆண்டவர் என்னை மன்னித்திருக்கிறார். **நான் மிகுந்த மன சமாதானத்தோடு இருக்கிறேன். என் இருதயத்தில் எந்தப் பாரமும் இல்லை. சிறையை விட்டு வெளியே செல்ல வேண்டும் என்ற நாட்டமுமில்லை. நான் என் கடைசி வேளைக்காகக் காத்திருக்கிறேன்.** (Expecting for my last hour to come) **இயேசு உன்னை மன்னிப்பாராக**” என்றார் அக்சினோவ்.

மகார் செமியோனிச் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் “வியாபாரியைக் கொலை செய்து பணத்தைக் கொள்ளையடித்தது நான்தான்” என்று ஒப்புக்கொண்டு தனது ஒப்புதல் வாக்குமூலத்தை (Confessional Statement) கொடுத்தான். அதன் அடிப்படையில் அக்சினோவ் விடுதலை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆணையை அறிவிக்க வந்தபோது ஆணையை அறியும் முன்னமே அக்சினோவின் ஜீவன் அவரை விட்டுப் பிரிந்துவிட்டது. அக்சினோவ் மரித்துவிட்டார். அதிகாரிகள் அதிர்ச்சியில் ஸ்தம்பித்து நின்றனர். ●

நீதிமன்றச் செய்தி

# கன்வென்ஷன் கூட்டங்களை தடைசெய்யாதிருங்கள்
## நிபந்தனைக்குட்பட்டு அனுமதியுங்கள் - நீதிமன்றத் தீர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம் பெருந்துறைவிளை, பெத்தேல், புதுவாழ்வு கிறிஸ்தவ சபை 7.2.20 முதல் 9.2.20 வரை நடத்த திட்டமிருந்த கன் வென்ஷன் கூட்டத்திற்கான அனுமதி கேட்டபோது மாவட்ட ஆட்சியாளர் தனது 6.2.20 தேதிய ஆணையின்படி அனுமதி மறுக்கப்பட்டது. அந்த ஆணைக்கு எதிராக கன்வென்ஷன் பொறுப்பாளர் Rev.C.ராகவன் மதுரை உயர் நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

**நீதிபதி மதிப்பிற்குரிய A.D. ஜெகதீஷ் சந்திரா** W.P (M.D) 3726/2020 விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சாமிதுரை அவர்களும் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.S.பாரதி அவர்களும் ஆஜராகி தங்கள் தரப்பு வாதத்தை அளித்தனர்.

வழக்கறிஞர் சாமிதுரை அனுமதி மறுக்கப்பட்ட இந்த கன்வென்ஷன் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் கடந்த 19 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முருகானந்தம் என்ற ஒருவர் மார்த்தாண்டம் காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர் அனுமதி மறுத்திருப்பது நியாமானதல்ல. மேலும் கூட்டம் நடத்தும் தனியார் ஒருவரின் பட்டா இடத்தில் அவரது அனுமதியோடு அந்த இடத்தில் நடத்தப் படுகிறது. மேலும் தமிழக காவல்துறைத் தலைவர் (Director Genl of police) தமது (R.C. 007301/Genl/1(1) 2019 தேதி 9.4.2019) சுற்றறிக்கையில் (Circular) பொதுக்கூட்டமோ, ஊர்வலமோ நடத்த அனுமதி கேட்டு அணுகும் போது சுற்றறிக்கையில் சொல்லப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டு நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடத்த மனுதார் தரப்பில் ஆயத்தமாக உள்ளனர் என்பதை எடுத்துரைத்தார். அரசு தரப்பில் வக்கீல், காவல் நிலையத்தில் முருகானந்தம் கொடுத்த மனுவை முதன்மைப்படுத்தி வாதிட்டார். இருதரப்பு வாதத்தையும் கேட்டபின் **நிபந்தனைக்கு உட்பட்டு கன் வென்ஷன் நடத்த உத்தரவிட மாவட்ட ஆட்சியாளருக்கு அறிவுரை கூறி 25.2.20 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது** (தீர்ப்பில் நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன). மேற்குறிப்பிட்ட தீர்ப்பின் நகல் வேண்டுவோர் **wocmdu@ gmail.com** அல்லது 98421 43523(sms)

- தொகுப்பாசிரியர் ●

---

**“இங்கே நாங்கள் வெளிச்சத்தையும் தூய அறிவையும் பெற்றுக் கொள்ளுகிறோம்” (Here we receive light and sacred Knowledge)**

**- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் சொல் (Motto)**

# கீழ்ப்படிவோம்

**"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது"** (யோவா.10:27)

பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களையும் - நீர் வாழ்வன, நிலத்தில் வாழ்வன, சகலவித காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள் எல்லாவற்றையும் ஒன்றுமில்லாமையிலிருந்து ஆண்டவர் தம்முடைய ஜீவனுள்ள வார்த்தையைக் கொண்டு உண்டாக்கினார். அவைகள் அவருடைய கட்டளையின்படியே அதினதின் இனத்தைப் பிறப்பித்துப் பெருகின, பெருகிக் கொண்டிருக்கின்றன. முதல் மனிதனை தம்முடைய ஜீவசுவாசத்தால் படைத்தார். மனிதனின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனிதனுக்கு ஏற்ற துணையாகப் பெண்ணைப் படைத்தார். ஆகவே சகலமும் அவரால் உண்டானவைகள். சிருஷ்டிகள் அனைத்தும் சிருஷ்டித்த அவருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்ற அவருடைய எதிர்பார்ப்பின்படியே அவைகள் கீழ்ப்படிந்தன.

## சிருஷ்டிகளின் கீழ்ப்படிதல்

யோசுவா, ஆண்டவரிடம் பேசிய பின் "சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும், தரித்து நில்லுங்கள்" என்று கட்டளையிட்டான். **சூரியனும், சந்திரனும் கீழ்ப்படிந்து அப்படியே நின்றன** (யோசு.10:12,13). சீடர்களும், இயேசுவும் கடலில் பயணம் செய்தனர். படகின் பின்னணியத்தில் இயேசு நித்திரையாக இருந்தார். "அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதன்மேல் மோதிற்று" (மாற்.4:37). சீடர்கள் இயேசுவை எழுப்பி அபயக்குரல் இட்டனர். "அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: "இரையாதே, அமைதலாயிரு" என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று" (வ.39) **காற்றும், கடலும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தன.** இயேசு, பழங்களை எதிர்பார்த்து பழங்கள் இருப்பது போன்று காட்சியளித்த வழியருகே நின்ற அத்திரமரத்தை உற்று நோக்கினார். அதில் கனியொன்றையும் காணாததினால் "இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது" என்றார். அந்த அத்திமரம் பட்டுப்போயிற்று (மத்.21:19,20). **மரங்களும் அவரது கட்டளைகளுக்கு இசைவாகவே கீழ்ப்படிகின்றன.** மரித்து நான்கு நாட்களாக கல்லறையில் அழுகி நாற்றமெடுத்த நிலையிலிருந்த லாசருவை நோக்கி, "லாசருவே, வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.

கல்லறையிலிருந்த லாசரு இயேசுவின் அழைப்பின் சத்தம் கேட்டு வெளியே வந்தான். வேறுவிதமாகச் சொன்னால் **மரித்தவனோடு பேசினார். செத்த பிரேதம் கீழ்ப்படிந்து உயிரோடு எழுந்தது** (யோவா.11:39-44). கப்பலிலிருந்து கடலிலே தூக்கிப் போடப்பட்ட யோனாவை விழுங்கி வயிற்றில் பத்திரமாக வைத்துக் கொள்ள பெரிய மீனுக்குக் கட்டளையிட்டார். அது சரியான நேரத்தில் கப்பலின் அருகே வந்து யோனாவை கடலில் போட்ட மாத்திரத்தில் அவனை விழுங்கியது (யோனா 1:17) மீண்டும் மீனுக்குக் கட்டளையிட்டார். அது கரைக்கு வந்து அவனைக் கக்கிப் போட்டது. (2:10) ஒரு மீனின் கீழ்ப்படிதல் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! சிருஷ்டிகருக்கு சிருஷ்டிகளின் கீழ்ப்படிதலைப் பாருங்கள்! அவருடைய சிருஷ்டிகள் அனைத்தும் அவருடைய கட்டளைக்குக் காத்து இருக்கின்றன!

### உம்முடைய வார்த்தையின்படியே செய்கிறேன்!

கெனேசரேத்துக் கடற்கரையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பார்ப்போம். மக்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி இயேசுவினிடத்தில் திரண்டுவந்தனர். மக்கள் அவரை நெருங்கி வந்தபடியால் அவர் கரையில் நின்ற ஒரு படகில் ஏறினார். அதைச் சற்றே தள்ளி கடலில் நிற்கும்படி கேட்டுக் கொண்டார். பின் மக்களுக்குப் போதகம் பண்ணினார் (Floating Platform) அது சீமோனுடைய படகாக இருந்தது. சீமோன் இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் கிடைக்காமல் வெறுமையாய்த் திரும்பியிருக்கிறான் என்பதை முன்பே அறிந்து கொண்டபடியால் சீமோனை நோக்கி ஆழத்திற்குச் சென்று வலையைப் போடும்படிச் சொன்னார். “இரவெல்லாம் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை, ஆகிலும் **உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்”**என்றான். கீழ்ப்படிந்து சென்ற சீமோனை மீன்பிடிக்க அனுப்பிவிட்டு அவர் சும்மா இருந்திருப்பார் என்று நினைக்கிறீர்களா? அல்ல. அவர் சீமோன் பேதுருவுக்காகச் செயல்பட ஆரம்பித்தார். கடலில் அந்தப்பகுதியிலுள்ள மீன்களுக்கெல்லாம் கட்டளையிட்டார். அவைகளெல்லாம் அவரது கட்டளைப்படியே சீமோன் போட்டிருந்த வலையருகே வந்தன. வலையருகே வந்தது மாத்திரமல்ல. **இயேசுவினிடத்திலிருந்து கட்டளை பிறந்தபடியால் மீன்கள் தங்களது ஜீவனை அருமையாக எண்ணாமல் வலையில் தாமாகச் சென்று சிக்கின**. ஏனென்றால் “என் சிருஷ்டிகர் சொல்லிவிட்டார்”. ஆகவே எந்தத் தயக்கமுமின்றி, முற்றிலும் கீழ்ப்படிந்து ஜீவனை அர்ப்பணிக்க வேண்டும் என்பதுதான் மீன்களின் எண்ணம். மீன்களின் தியாக மரணத்தை சிந்தித்துப் பாருங்கள்!

மரணமேயானாலும் அதை பொருட்டாக எண்ணாமல் கீழ்ப்படிந் திருக்கின்றன என்பது எவ்வளவு ஆச்சரியம். வலை கிழிந்து போகத் தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தான்.

பின்னர் தனது கூட்டாளிகளாகிய செபதேயுவின் குமாரராகிய யாக் கோபையும், யோவானையும் உதவிக்கு அழைத்தான். திரளான மீன்களைப் பிடித்து சீமோன் பேதுருவும் அவனது நண்பர்களும் பிரம்மிப்படைந்தனர். இப்படிப்பட்டப் பேருதவிக்கு தாங்கள் பாத்திர வான்கள் அல்ல என்று கருதி "ஆண்டவரே, நான் பாவியாகிய மனுஷன்" என்று தன்னை உணர்ந்து அறிக்கை செய்தான் (லூக்.5:8). அப்பொழுது "சீமோ னுக்குக் கூட்டாளிகளான செபெதேயு வின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித் தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிற வனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக்.5:10,11) சீமோன் பேதுரு மாத்திரமல்ல அவனது நண்பர் களாகிய யாக்கோபும் யோவானும் இயேசுவின் சீடர்களானார்கள் என் பதையும் விளங்கிக் கொள்ளுகிறோம்.

சீமோனை நோக்கி "பயப்படாதே, இதுமுதல் மனுஷரைப் பிடிக்கிற வனாயிருப்பாய்" என்று சொன்ன மாத்திரத்தில் படகுகளையும் வலை களையும் கடற்கரையிலே அப்படியே விட்டுவிட்டு தங்கள் பெற்றோரையும் கலந்து ஆலோசிக்காமல் அவரைப் பின்பற்றினார்கள். மனுஷரைப் பிடிப் பதில் (Catching men) அவர்களுக்கு முன் அனுபவம் இல்லாதிருந்தும் இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப் படிந்தார்கள். "மனுஷரைப் பிடித்தல்" என்ற சொல்லுக்கு கிரேக்க மூல மொழியில் "சோகிரியோ" (zogreo) என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அச்சொல்லுக்கு "உயிரோடு பிடித்தல்" என்று அர்த்தம். வலையில் சிக்கும் மீன்கள் செத்துவிடும். எனினும் மனுஷர் களைப் பிடிக்கும்போது அவர்கள் ஆத்துமாவுக்கு சேதமில்லாமல் பிடிக்கவேண்டும். இதை எப்படிச் செய்யப்போகிறோம் என்ற திகைப்பு அவர்களுக்கு இல்லை. அப்படி யானால் அவர்கள் நம்பிக்கை என்ன? மீன்பிடிக்கும் தொழிலில் எந்த அனுபவமும் இல்லாத ஒரு தச்சனுடைய மகனுக்குக் கீழ்ப்படிந்து ஆழத்தில் வலையைப் போட்டுத் திரளான மீன்களைப் பிடித்தார்கள். மீன்களை அவர்களுடைய வலையில் வந்து விழச் செய்தவர் அழிந்து போகிற ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தி நம்மைத் தேடி வந்து சேர இயேசுகிறிஸ்துவிற்கு வல்லமையுண்டு என்ற நிச்சயம் அவர்களுக்கிருந்தது. அதை

வெற்றியோடு செய்தனர். சீமோன் பேதுரு சீடர்களுள் முக்கிய சீடனானான். ஊழியப் பாதைக்கு சீமோன் ஒரு முன்மாதிரியாக மாறினான்.

"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவை களை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" என்று இயேசு சொன்னார். மேலும் "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்" என்று சொல்லி யுள்ளார். அவர் தெரிந்து கொண்ட வர்கள் அவருடையவர்கள். அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிகிறார்கள். அவர்களைக் கொண்டு அவர் பெரிய காரியங்களைச் செய்கிறார். அவ ருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது அவர் நம் மீது பிரியப் படுகிறார். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங் களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக் கிறீர்கள். முன்னே நீங்கள் தேவ னுடைய ஜனங்களாயிருக்க வில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களா யிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்"(1 பேது.2:9,10). அவருக்குக் கீழ்ப் படிவோம். இரக்கத்தைப் பெற்றுக் கொள்வோம். ●

**வெளிநாட்டுச் செய்திகள்: அன்பார்ந்த மாணவச் செல்வங்களே!**



**அங்கவீனர்களைப் பரிவோடு தாங்குங்கள்!**
**கேலி செய்யாதிருங்கள்**

குவாடன் (வயது 9), ஆஸ்திரேலியாவில் பிரிஸ்பேன் நகரில் நான் காம் வகுப்பு படிக்கும் மாணவன். குவாடனின் தலை பெரிதாகவும் கைகால்கள் போதிய வளர்ச்சியின்றி குள்ளமாக உள்ளான்.இதனால் பள்ளியிலுள்ள சகமாணவர்கள் அவனைக் கேலி செய்துள்ளார்கள். இதன் விளைவாக அவனது பிஞ்சு உள்ளம் கதறி அழுகிறது. பள்ளியிலிருந்து அவனை அழைத்து வர தாயார் சென்றிருந்த நேரத்திலும் கூட தாயார் முன்னிலையிலும் அவனைக் கேலி செய்துள்ளனர். அவனது தாயின் உள்ளம் எவ்வளவாய்ப் புண்பட்டி ருக்கும்? தன் தாயிடம் "நான் தற்கொலை செய்து விடுகிறேன். எனக்கு கயிறு வாங்கித்தாருங்கள்" என்றும் "யாராவது என்னைக் கொன்று விடுங்களேன்" என்றும் கதறி அழுதுள்ளான்.இதன் வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. அன்பார்ந்த பெற்றோர்களே! அங்கவீனர்கள் மீது உங்கள் பிள்ளைகளுக்கு பரிவையும் இரக்கத்தையும் கற்றுக் கொடுங்கள்.

தினமலர் 22.2.2020

# அன்பு அற்றுப்போனதேன்?

"டேய்", கூப்பிடும் குரலைக் கேட்டு, சாம் நின்று திரும்பிப் பார்த்தான். பின்னால் யாரும் இல்லை. சுற்றிலும் பார்த்துவிட்டு மீண்டும் நடக்கத் துவங்கினான். அது பனிவிழும் அதிகாலை வேளை. மணி 6.30. அந்தப் பெரிய நகரத்தின் பிரதானச் சாலையின் ஓரம் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்தான். 'டேய், உன்னைத்தான்' என்று மீண்டும் அந்த தடித்த குரல் கேட்டது. இப்பொழுது சரியாக குரல் ஒலித்த திசையில் திரும்பிப்பார்த்தான். சாலை ஓரத்தில் நின்றிருந்த அந்த விலை உயர்ந்த காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நடுத்தர வயதுள்ளவரின் முகம் தெரிந்தது. தன்னைக் கூப்பிட்ட குரல் அவருடையது என்பதை சாம் அறிந்துகொண்டான். அவனை நோக்கி கையைக் காட்டி 'இங்கே வா' என்று அழைத்ததை விளங்கிக் கொண்டு அவர் அருகே காரின் பக்கம் வந்து நின்றான் சாம்.

'என்ன அது உன் கையில்...! என்றார்.

'புதிய ஏற்பாடு' என்று கையில் இருந்த இரண்டு புதிய ஏற்பாடுகளை உயர்த்திக் காண்பித்தான். 'பையில்...?' மீண்டும் கேட்டார்.

'பைபிள்' என்று தன் தோளில் மாட்டியிருந்த பையில் வைத்திருந்த முழு வேதாகமம் ஒன்றை வெளியே எடுக்காமல் அதைத் தொட்டு சுட்டிக் காட்டினான்.

'உன் பேரென்ன?' என்று கேட்டார். 'சாமுவேல்' என்றான். என்ன? திரும்பவும் கேட்டார். 'சாமுவேல் ஜான்சன்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினான்.

அது என்ன சொன்ன...புதிய ஏற்பாடா? அப்படின்னா என்ன? 2

அதாவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியிலுள்ள மனுக்குலம் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபடவும், மனிதன் இரட்சிக்கப்படவும், தேவனுடைய அன்பை விளங்கிக் கொள்ளவும். மனிதனாக அவதரித்த அதிசயம் எழுதப்பட்டுள்ளது தான் புதிய ஏற்பாடு என்றான் சாம்.

காரில் உட்கார்ந்திருந்தவண்ணம் அவன் உதடசைவுகளையே ஆச்சரியமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

'அப்படியானால் பழைய ஏற்பாடு என்பது என்ன? மீண்டும் கேட்டார்.

தேவனின் சிருஷ்டிப்பின் அதிசயம், மனிதனை தேவன் உருவாக்கின விதம், தேவனின் செயல்பாடுகள், மனிதன் கீழ்படியாமையால் பாவத்தில் வீழ்ந்த விதம், அதனால் தேவன் துக்கப்பட்டு அவனை மீட்க தேவன் தமது குமாரன் இயேசுவை பூமியில் மனுஷனாக அவதரிக்க கூறப்பட்ட தீர்க்க தரிசனங்கள் அடங்கியதுதான் பழைய ஏற்பாடு.

டேய் தம்பி சாமுவேல், ரொம்ப குழப்பாதப்பா. நீ எத்தனாவது படிக்கிறே, அவர் கேட்டார். 'ஆறு' அவன் கூறினான். ஆறாப்பு படிக்கிறவனா இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாய்?. அவர் ஆச்சரியப்பட்டார். சரி எனக்கு சுருக்கமாகச் சொல்லு, புரியறமாதிரி.

ஐயா, வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது. யோவா.3:16-ல் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன், எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்பதே மொத்த வேதாகமத்தின் சுருக்கம் என்றான்.

சாம், இன்னும் சுருக்கமாகச் சொல்லு.

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார், என்பதைக் கூறுவதுதான் அது என்றான்.

தம்பி, முழுவேதமும் என்ன சொல்லுது, ஒரே வரியில் சொல்ல முடியுமா?

முடியும். **'அன்பு'** ஆஹா, அபாரம் இந்த சின்ன வயசுல எவ்வளவு தெளிவு. தம்பி சாமுவேல் ஜான்சன்! நீ என்ன இவைகளை விற்பனை செய்கிறாயா? இல்லை, ஐயா. தினமும் நான் காலையில ஐந்து புதிய ஏற்பாட்டை தேவைப்பட்டவர்களுக்கு இலவசமா கொடுப்பேன். விரும்பிக் கேட்பவருக்கு வேதாகமத்தை ரூ.100க்கு கொடுப்பேன். இது ஸ்கூல் போவதற்கு முன் என் அனுதினம் அதிகாலை வேலை என்றான்.

'சாம் நாளைக்கு இந்த நேரம் நான் இங்கு வருவேன். நீ உன் வீட்டுக்குக் எங்களைக் கூப்பிட்டுப் போய் 150 பைபிள் கொடு எடுத்துக்கறேன். எங்கிட்ட என் மில்லில் 150பேருக்கு மேல வேலை செய்யறாங்க. உங்கிட்ட இப்ப இல்லைன்னாலும் பரவாயில்ல, மெதுவாக்கூட கொடு என்றார் அன்பாக.

'அன்பு', ஆம் அன்பின் சொரூபியாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவன் மனுக்குலத்தின் மீது தாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தவே மனுஷனாக அவதரித்தார்.

அவரே அன்பு, வேதாகமத்திலுள்ள 39 பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களிலும், புதிய ஏற்பாட்டு 27 புத்தகங்களிலும் கூறப்பட்டுள்ள சத்தியம், நீதி, வெளிச்சம், தீர்க்கதரிசனம் ஆகியவைகளின் மைய நோக்கமே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாழ்ந்து காட்டிய அன்புதானே.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது திருவாய் மொழிந்ததும் இதுதானே. **'நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற**

**புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்"** (யோவா.13:34). அவர் 'நான் உங்களில் அன்பாயிருந்தது போல' என்று தம்மைத்தாமே முன் உதாரணமாகக் காண்பித்துக் கூறுகிறார். இதுவே புதிதான கட்டளை என்றும், 'உங்களுக்குக் கொடுக்கிறேனென்றும்' கூறுகிறார்.

அப்படியானால் கொடுக்கப்பட்ட பழைய கட்டளை என்ன? ஆம், அதுதான். "...உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர் (லேவி.19:18) முன்பே கூறப்பட்ட இந்த பழைய கட்டளைக்கும் புதிதான கட்டளைக்கும் என்ன வேறுபாடு என்றால் இயேசுவின் முன்மாதிரிதான். அதாவது அன்புகூருவதற்கு முன்னதில் நம்மையும், புதிதானதில் இயேசு கிறிஸ்து தம்மையும் முன்மாதிரியாகக் கூறியுள்ளார். ஏனெனில் மனிதர் களாகிய நமக்கு அன்பு கூருவதற்குத் தெரிவதில்லை. அதாவது பிறர் மீது அன்பு கூறத் தெரிவதில்லை. உங்கள் மீதும் உங்களுக்கு அன்பு கூறத் தெரிவ தில்லையே,

ஆம், அன்றாட செய்தித்தாள்களில் நாம் பார்க்கிறோமே. "பெற்ற தந்தையைக் கொன்ற மகன்" "மனைவியின் கள்ளக் காதலனைக் கொண்டு கணவனைக் கொன்றாள்", "கள்ளக் காதல் உறவுக்குத் தடையாயிருந்த மகனைக் கொன்ற தாய்", "மனைவியைக் கொன்ற கணவன்", "பிள்ளை களைக்கொன்று தானும் தற்கொலை", தொடக்கத்தில் அன்பு இருந்தது உண்மைதான். ஆனால் **ஒரு காலக்கட்டத்தில் அந்த அன்பு அழிந்து போயிற்று. அன்பின் அழிவின் விளைவுகள் தான் இதுபோன்ற சம்பவங்கள்.**

அதுமட்டுமா? தனிமனிதன் அன்பு அற்றுப்போய், தான் சார்ந்த மனித சமுதாயத்தின் மீதும் வெறுப்பு கொண்டு தானும் மடிந்து மற்ற அநேகரைக் கொன்று குவித்த நிகழ்ச்சிகளையும் நாம் கேட்கிறோம், காண்கிறோம். சென்ற ஆண்டு 2019-ல் மனுஷகுமாரன் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்டரன்று தேவாலயங்களில் தேவனை ஆராதிக்க வந்த அப்பாவி மக்களிடையே மனதில் கொலைவெறியும் முதுகில் வெடிகுண்டையும் சுமந்துவந்த வாலிபன் அதை வெடிக்கச்செய்து 259 ஒன்றுமறியாத மனித உயிர்களை கொழும்பு நகரில் கொன்று குவித்த நிகழ்ச்சி உலகையே உலுக்கவில்லையா?

2001 செப்டம்பர் 11ஆம் நாளில் அமெரிக்க தேசத்தில் அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானம் 11, மற்றும் யூனைடெட் ஏர்லைன்ஸ் (விமானம்) 175, உயர்ந்த இரட்டைக் கோபுர கட்டிடங்களில் ஊடுருவிப் பாய்ந்து சிதறியடித்து 2996 அப்பாவிமக்களைக் கொன்று குவித்து தாங்களும் மரித்து, மேலும் 2500 மக்கள் ஊனமுற்றுள்ளதையும் இன்றும் நாம் நினைக்கும் போதெல்லாம் மனம் பதறுகிறதல்லவா?

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? அன்பு அற்றுப்போன

நிலைமைதான். ஆம் மனிதன் தன் மீதும் அன்பு கொள்ளத் தெரிவதில்லை. மற்றவர் மீதும் அன்பு செலுத்தத் தெரிவதில்லை, எனவேதான் அன்பின் சொரூபியான இயேசுகிறிஸ்து தாம் வாழ்ந்து காட்டி, தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்து அன்புகாட்டினார்.

மனுக்குலத்தின் மீது தாம் காட்டிய அன்பு அளவிடமுடியாதது. அன்பின் சொரூபியாகிய இயேசுகிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் கூறிய அன்பின் செய்திகளனைத்தையும் தாமே வாழ்ந்து காட்டிவிட்டு, 'நீங்கள் ஒருவரி லொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்' என்றார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாழ்ந்து காட்டிய அன்பு மனுக்குலம் அனைத்துக்குமே முன்மாதிரி. ஆம் அவரே நம் முன்மாதிரி.

சிறுவன் சாமுவேல் ஜான்சன் கூறிய 'முழு வேதாகமம் கூறுவது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தாமே வாழ்ந்து காட்டிய தன்னலமற்ற தெய்வீக அன்புதானே. இயேசுகிறிஸ்துவைப் போல பிறரையும் நேசிப்பது மிகக்கடினமான காரியம்தான். ஆனால் இயேசுவோடு நடப்போமானால் அது முடியாததல்ல.

**- S. தங்கராஜ், சேலம் போன்: 94436 99444** ●

**4ம் பக்கத் தொடர்ச்சி...**

என்று குறிப்பாக தோமாவுக்கு சொல்லப்பட்டாலும் எல்லா சீடர்களுக்குமே இது பொருந்தும். ஏனெனில் அனைவருமே இயேசுவின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இழந்தவர்களாய்ப் பயந்து ஓடிப் பதுங்கியவர்கள் தான்.

இயேசுவும் சீடர்களும் படகில் பயணித்த வேளையில் சுழற்காற்றையும் மோதி அடிக்கும் அலைகளையும் கண்டு உயிருக்குப் பயந்து நடுங்கியவர்கள் தான். அனைத்து சூழ்நிலைகளும் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கிறது (All the circumstances are under his control) என்பதை சீடர்கள் அறியாமற்போனார்கள். அவர் காற்றையும் கடலையும் அதட்டி அமைதலாக் கினார். "இயேசு அவர்களை நோக்கி **ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று** என்றார்" (மாற்.4:40). அப்பொழுது ஆச்சரியத்தில் சீடர்களுடைய விழிகள் விரிந்தன. நம் வாழ்க்கைப் பயணத்தில், ஊழியப்பயணத்தில் இயேசு நம்மோடிருக்கிறார். நம் பயத்தை உதறித் தள்ளுவோம். இயேசுவையும் அவருடைய வல்லமை யையும் பற்றிக் கொள்வோம். உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள இயேசு நம்மோடிருக்கிறார். உயிர்த்தெழுதலை தியானிக்கிற நாம் சதாகாலமும் உயிரோடிருக்கிற அவரைப் பற்றிக் கொள்வோம்! பயம் தவிர்ப்போம்! விசுவாசத்தில் பெலப்படுவோம்! செயல்படுவோம்!!

இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை

# கிறிஸ்தியானின் மோட்சப் பிரயாணம்

**- பாகம் 9**

கிறிஸ்தியானும் உண்மையானவனும் இணைந்து பரலோகப் பட்டணத்தை நோக்கிப் பயணித்தனர். தாங்கள் கடந்து வந்த வழியில் அவரவர்கள் சந்தித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மரண இருளின் பள்ளத்தாக்கைக் (Valley of the shadow of death) கடந்து வந்தது மிகக் கொடியதாக இருந்தது. அதைக் குறித்து கடந்த இதழில் (மார்ச் 2020) கண்டோம்.

## கிறிஸ்தியானும் உண்மையானவனும் வாயாடியைச் சந்தித்தல்

கிறிஸ்தியானும் உண்மையானவனும் (Faithful) பயணித்துக் கொண்டிருக்கும்போது வாயாடி (Talkative) என்பவனும் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான். அவன் வேத வசனங்களைக் குறித்து மிக அருமையாக, சரளமாகப் பேசினான். வேதத்தில் அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்பது போலவும், எதை எப்படிப் பேச வேண்டும் என்பதையும், உபதேச சத்தியங்களையும் தேவனுடைய வார்த்தையையும் மிகத் தெளிவாக அறிந்து அவற்றை விவரிக்கும், வாதிடும் நல்ல ஆற்றல் பெற்றவனாகக் காணப்பட்டான். ஆனால் கிறிஸ்தியான் அமைதியாகவே இருந்தான். உண்மையானவன்தான் வாயாடியோடு பேசிக் கொண்டே வந்தான். உண்மையானவன் கிறிஸ்தியானிடம், "வாயாடி எவ்வளவோ காரியங்களை வேதாகமத்திலிருந்து எடுத்துச் சொல்லிக் கொண்டே வருகிறான். ஆனால் உன்னைப் பார்த்தால் உன் முகத்தில் கொஞ்சங்கூட சந்தோஷம் இல்லையே ஏன்?" என்று கேட்டான். அதற்கு கிறிஸ்தியான் "வாயாடி நன்றாகப் பேசுகிறானே, அன்றி அவன் அதை செயல்படுத்துகிறதில்லை. அவன் தன் தலையில் ஏற்றிக்கொண்ட அறிவைக் கொண்டு பேசுகிறானே தவிர ஒரு வார்த்தை கூட அவன் இருதயத்திலிருந்து வரவில்லை. அவன் பக்தியுள்ளவன் அல்ல. அவன் வெற்றிடமான ஒரு வீட்டைப் போன்றவன். முட்டையின் வெள்ளைக் கருவில் எந்த மணமோ, குணமோ இல்லாதது போலவே இவனிடத்தில் ஒன்றுமில்லை. இவனுடைய அறிவு கிறிஸ்தவ வாழ்வாக மாறப் போவதில்லை. சுருக்கமாகச் சொன்னால் வாயாடி ஒரு செயல்படாதக் கிறிஸ்தவனே" என்றான் கிறிஸ்தியான். கிறிஸ்தியானுக்கு பகுத்தறியும் ஆவி இருந்தபடியால் வாயாடியின் வேத அறிவு எப்படிப்பட்டது என்பதை விளங்கிக் கொண்டான். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிப்பட்டவர்களை சத்தமிடும் வெண்கலம்

என்றும், ஓசையிடுகிற கைத்தாளம் போன்றவர்கள் என்றும் ஒப்பிட்டுப் பேசுகிறார். கிறிஸ்தியான், உண்மை யானவனிடம், கிருபையின் கிரியை குறித்து (Work of Grace) வாயாடி யிடம் பேசிப் பார்க்கும்படியாகவும் அதற்கு அவன் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம் என்றும் ஆலோ சனை சொன்னான்.

உண்மையானவன் கிறிஸ்தி யானின் ஆலோசனையின்படியே "கர்த்தர் தமது இரட்சிக்கும் கிருபையைக் கொண்டு (Saving Grace of God) ஒரு மனிதனின் இருதயத்தை எப்படி அடையாளங் கண்டு கொள்ளுகிறார்?" என்ற ஒரு கேள்வியை வைத்தான். இந்தக் கேள்வியைக் கேட்டதைக் குறித்து வாயாடி மிகவும் பரவசமடைந்தான். ஏனென்றால் அவர்களோடு தொடர்ந்து பேச சரியான தருணம் கிடைத்துவிட்டது என்று எண்ணிக் கொண்டான். "முதலாவதாக தேவ னுடைய கிருபை ஒரு மனிதனின் இருதயத்தை எட்டும்போது தன் னுடைய பாவத்தைக் குறித்த உணர் வையும் பாவத்திற்கு விரோதமான கதறுதலையும் (outcry against sin) உண்டாக்குகிறது" என்றான். உண்மையானவன் உடனே குறுக் கிட்டு **"கிருபையின் செயல் இரு தயத்தை ஈர்த்து மனிதனின் ஆத்துமா பாவத்தை வெறுத்துத் தள்ளத்தக்கதாக நாட்டத்தை உண் டாக்குவதாக இருக்க வேண்டும்"** (The heart should incline the soul to abhor sin) என்று சொன்னான். வாயாடி, பாவத்திற்கு விரோதமான கதறுதலுக்கும் பாவத்தை வெறுத்துத் தள்ளுவதற் கான நாட்டத்திற்கும் பெரிய வேறுபாடு இருப்பதாகக் கண்டுகொள்ளவில்லை. மேலும் உண்மையானவன் "பாவத் திற்கு விரோதமாக கதறுகிற அநேக மக்கள் அடிக்கடி அவர்கள் முன்பு செய்து வந்த பாவத்தை மீண்டும் செய்கிறதைக் குறித்து கவலைப்படா தவர்களாக இருக்கிறார்கள் என் பதைக் காண முடிகிறது. உதாரண மாக யோசேப்பின் எஜமாட்டி அவள் செய்ய நினைத்த பாவத்திற்கு விரோதமாக குரல் எழுப்பினாள். "பாருங்கள், எபிரேய மனுஷன் நம்மிடத்தில் சரசம்பண்ணும்படிக்கு... சயனிக்கும்படிக்கு என்னிடத்தில் வந்தான். நான் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டேன்....நான் கூப்பிடுகிறதைக் கேட்டு தன் வஸ்திரத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டான்". ஏன் குரல் எழுப் பினாள்? யோசேப்பு சம்மதிக்காததால் குரல் எழும்பினாள். குரல் எழும் பினாலும் பாவம் அவளுக்குள் இருந்தது. ஆகவே பாவத்திற்கு விரோதமான அவளுடைய கதறுதல் மாயையானதே" என்றான்.

உண்மையானவன், வாயாடி யிடம் மற்றுமொரு கேள்வியை வைத்தான். "இரண்டாவது வழியாக இருதயத்தில், கிருபையின் செயல் பாட்டை (work of Grace) எப்படிக் கண்டுகொள்ள முடியும்?" என்ற கேள்விக்கு வாயாடி "சுவிசேஷத்தின்

இரகசியத்தை மிகப்பெரிய அறிவின் (Great knowledge) மூலமாகத் தான் கண்டுகொள்ள முடியும்'' என்று பதிலளித்தான். அதற்கு உண்மையானவன் ''ஆத்துமாவில் சம்பவிக்கும் கிருபையின் செயல் பாட்டை சுவிசேஷத்தின் பெரிய அறிவைக் கொண்டு கண்டு கொள்ள முடியாது'' என்று மறுத்தான். சுவிசேஷத்தை அறிந்து கொள்வதில் கிடைக்கும் ஆசீர்வாதமும் ஆத்துமாவில் ஏற்படும் கிருபையின் செயல்பாட்டால் கிடைக்கும் கிருபையும் ஒன்றல்ல. ஆசீர்வாதம், சுவிசேஷத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவில் அல்ல, பெற்ற அறிவை நடை முறைப்படுத்தும் போதுதான் வருகிறது. அறிவு ஒரு யூகத்தின் அடிப் படையில் தான் செயல்படுகிறதே அல்லாமல் விசுவாசத்தால் வரும் கிருபையினாலும் கிறிஸ்துவின் அன்பினாலுமே ஆசீர்வாதம் வரும். ஆத்துமாவிலே ஏற்படும் கிருபையின் செயல்பாடு பாவத்தின் உணர்வின் நிச்சயத்திற்கு வழி நடத்துகிறது. அது இருதயத்தின் பரிசுத்தத்திற்கு நேராக வழிநடத்தி அதைத் தொடர்ந்து குடும்பத்தில் பரிசுத்தம், குடும்பத்தில் ஏற்படும் பரிசுத்தம் சம்பாஷணை மூலமாக உலகப் பரிசுத்தத்திற்கு வழி நடத்துகிறது. கடைசியாக உண்மையானவன், வாயாடியிடம் ''உன்னுடைய சம்பாஷணை பரிசுத்தத்தை வெளிப்படுத்துகிறதா?'' என்ற கேள்வியை கேட்க வைத்தது. அப்பொழுது அந்தக் கேள்வி வாயாடியை உணரவைத்தது. ஆகவே வாயாடி, உண்மையுள்ளவனைப் பார்த்து ''நீரே எனக்குப் போதகராகவும், நியாயாதிபதியாகவும் இரும்'' என்று கூறி தன்னுடைய மெய்யான நிலை உண்மையுள்ளவனுக்கு தெரிந்துவிட்டதே என அறிந்து மிகுந்த துக்கமடைந்தான். வாயாடி தன் உள் மனதில், உண்மையுள்ளவனும் கிறிஸ்தியானும் தன்னுடைய உள்ளார்ந்த வாழ்வை கண்டுகொண்டார்களே என்ற கோபத்தில் அவர்களை விட்டுப் போய்விட்டான்.

உண்மையானவன், தனது மூளையின் ஆற்றலால் தலையில் ஏற்றிக் கொள்ளும் அறிவுக்கும் கிருபையின் செயல்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள ஏற்ற சமயத்தில் கிறிஸ்தியான் செய்த நன்மையை நினைத்து கிறிஸ்தியானுக்கு நன்றி கூறினான்.

## நாம் கற்றுக்கொள்வது

இன்று நாம் காணப்போவது நம் அனைவருக்கும் மிக முக்கியமான பாடமாகும். இன்று நாம் காணும் சபைகள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களால் நிறைந்திருக்கிறது. முழு வேதாகமத்தையும் பலமுறை வாசித்தவர்கள் இருக்கிறார்கள். மனப்பாடமாகச் சொல்லுபவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் ஒரு காரியத்திலும் அதன்படி செய்யாதவர்களாகயிருக்கிறார்கள். மற்றவர்கள் மீது அன்பு செலுத்து கிறவர்கள் இல்லை. அநேகர் வாழ் வில் தூய்மை இல்லை. ஆனாலும் வல்லமையாக பிரசங்கிப்பவர்களாக உள்ளனர். ஆண்டவரை யாரும் வஞ்சித்துவிடலாம் என்று நினைக்க வேண்டாம். அவர் நம்முடைய வார்த்தையைக் கொண்டல்ல, நம் முடைய இருதயத்தையும் இருத யத்தின் நோக்கத்தையும் கண்டு நியாயம் செய்கிறவர். ஒரு விசு வாசிக்கு இந்த அறிவு இன்றியமை யாத தேவை.

''மரமானது அதன் கனிகளினால் அறியப்படும்'' என்று இயேசு கிறிஸ்து சொன்னார். நாம் பேசும் வார்த்தை களும் செய்யும் செயல்களும் ஒன்றா யிருக்கின்றனவா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். நாம் சரளமாகப் பிரசங்கிக்கும் ஆற்றல் உள்ளவர்களாக இருந் தாலும் நம்முடைய அயலகத்தாரை நேசிக்க முடியாவிட்டால் மற்றவர் களை மன்னிக்க முடியாவிட்டால் அதில் எந்த பயனுமில்லை, வேதாகமம் இது போன்ற சில அளவு கோல்களை வைத்திருக்கிறது. அது தீர்க்கதரிசியையும், பிரசங்கியையும் அளவிடும். அந்த அளவில் நாம் குறைவுப்பட்டவர்களாயிருக்க வேண்டாம். அன்பார்ந்த நண்பர்களே, நாம் பிரசங்கியாக இருந்தாலும், தீர்க்கதரிசியாக இருந் தாலும், விசுவாசியாக இருந்தாலும் நம்முடைய ஜீவியம் மற்றவர் களோடு பேசவேண்டும். நம்மைப் பார்க்கும் மற்றவர்களுக்கு நம் முடைய ஜீவியம் பக்திவிருத்தியை உண்டாக்குவதாக இருக்க வேண்டும்.

தேவ தூதர்களைக் குறித்து பேசிய பேச்சாளர் ஒருவர், அற்பு தங்கள் நடப்பிக்க நாம் தூதர் களுக்குக் கட்டளையிடலாம் என்றும், அவர்களோடு பேசலாம் என்றும். அப்படி பேச, கட்டளையிட பயன் படுத்த விரும்புகிறவர்களுக்குத் தான் பயிற்சியளிப்பதாகவும் கூறியுள்ளார். இவைகளெல்லாம் விநோதமாக உள்ளன. இவைகளெல்லாம் வேதத் திற்குப் புறம்பானவை. தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் இயேசு மாத்திரமே. தூதன் அல்ல.

நம்முடைய இருதயத்தில் கிருபை கிரியை செய்ய வாஞ்சிப்போம். ஜெபிப்போம். அப்படியானால் மாத்திரமே நாம் கிருபையில் வளர முடியும், பரிசுத்தத்தில் வளர முடியும். நம்முடைய விருப்பங்களையும் ஆண்டவர் கனப்படுத்துவார். நாம் கற்றுக் கொண்டதை தேவ கிருபை யை கொண்டு செயல்படுத்துவோம்.

- சகோ.லாரா டெலனோ, Email Id: **lauradelano@yahoo.com** ●

**''மெய்யான சபை ஜெபத்தால் பிழைத்திருக்கிறது, அசைகிறது, ஜெபத்திற்குள் இருக்கிறது'' - லியானார்ட் ரேவன்ஹில்ஸ்**

# தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்

**"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருங்கள்" (1 பேது.4:7)**

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால் நமக்கு தெளிந்த புத்தி இன்றிய மையாதது. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்றால் அது நம்முடைய ஜீவியத்தின் முடிவையும் உள்ளடக்கியது. தேவனுடைய சபையின் எதிராளி களுக்கும் அவர்களுடைய கிரியைகளுக்கும் முடிவு சமீபமாயிற்று, உலகத் திற்கும் முடிவு சமீபமாயிற்று. அதுமாத்திரமல்ல கர்த்தருடைய இரகசிய வருகைக்கும் அந்த வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் முடிவு சமீபமாயிற்று.

**ஜெபம் பண்ணுவதில் ஜாக்கிரதை**

தெளிந்த புத்தி இல்லாதபடியினால்தான் சிலருக்கு ஜெபிக்க முடியவில்லை. நாம் ஜெபம்பண்ண வேண்டும் என்று தீர்மானம் எடுத்து உட்கார்ந்தாலும் நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் பலவிதமான எண்ணங்கள், நினைவுகள், சிந்தைகளைக் கொண்டு வந்து ஜெபிக்க விடாமல் தடை செய் வான். ஜெபநேரத்தில் தான் தொலைபேசியில் அழைப்பு வரும், விருந்தினர் வீட்டிற்கு வருவார்கள், வீட்டில் சமாதானக் கேடு வந்து ஜெபிக்க முடியாமல் போய்விடும். தானியேலுக்கு அவனது ஜெபஜீவியத்திற்கு விரோதமாக தடைகள் வந்தன. ஆனாலும் அந்தத் தடைகளை எல்லாம் மேற்கொண்டு தினமும் பண்ணுகிற மூன்றுவேளை ஜெபத்தைச் செய்து கொண்டேதானி ருந்தான். தானியேல் தெளிந்தபுத்தி உள்ளவனாக இருந்ததினால்தான் தடை களை மேற்கொண்டு அவ்விதமாக ஜெபிக்க முடிந்தது. ஜெபித்ததின் காரண மாக கொலை செய்யப்படும்படி சிங்கக்கெபியில் போடப்பட நேர்ந்தாலும் அவனால் ஜெபிக்காமல் இருக்க முடியவில்லை. அதுபோல தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஜீவியத்தில் மரணமே வந்தாலும் நம் ஜீவியத்தில் ஜெபத்தை விடமுடியாதவர்களாக இருக்க வேண்டும். குடும்ப ஜெபம், தனி ஜெபம், உபவாச ஜெபம், தவறாமல் கூடி ஜெபிப்பது போன்றவை நம் ஜீவியத்தில் காணப்பட வேண்டும்.

**நமக்கு ஏன் ஜெப ஜீவியம் தேவை?**

நாம் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அதற்கேற்ற ஜெபஜீவியம் இன்றியமையாதது (லூக்.21:36). நம்முடைய இரட்சிப்புக்காக, ஞானஸ்நானத்திற்காக, பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காக, சுகத்திற்காக,

வேலைக்காக பலர் ஜெபித்து உதவி செய்திருக்கக் கூடும். ஆனால் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அவரவர் தான் ஜெபிக்க வேண்டும். கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவது என்பது ஒரு கர்ப்ப வேதனைப்படுகிற அனுபவத்தோடு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஒரு பெண் தன் பாரத்தைத் தலையில் சுமப்பது கடினம் என்று உணர்ந்தால் வேறு யாரையும் அந்தப் பாரத்தை சுமந்து கொள்ள செய்யலாம். ஆனால் கர்ப்ப வேதனைப்படுகிற பெண்ணின் வேதனையை யாராலும் பகிர்ந்து கொள்ள முடியாது. அவளேதான் அந்த வேதனையைச் சுமக்க வேண்டும். அருகில் இருப்பவர்கள் ஆறுதல்படுத்தி தைரியப்படுத்தத்தான் முடியும். வெளி.12ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் பொழுது நாம் ஜெயங்கொண்ட ஆண்பிள்ளையாகச் சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். **ஆகவே நம் ஒவ்வொருவருக்கும் கர்ப்ப வேதனை யோடு கூடிய ஜெபம் அதாவது வியாகுலபட்டு வேதனைப்பட்டு ஜெபிக்கிற அனுபவம் அவசியமாக இருக்கிறது.** ஜெபஜீவியம் இல்லை என்றால் நாம் பழைய பாவங்களில் விழுந்துபோக நேரிடும். அதிலிருந்து நாம் விடுபட முடியாது. பரீட்சைகள், சோதனைகளில் ஜெயிக்க முடியாது. மாறாகப் பரீட்சைகள், சோதனைகளில் சிக்கிக் கொள்வோம். எனவே நமக்கு ஜெப ஜீவியம் மிகவும் அவசியமாயிருக்கிறது. ஆகவேதான் ஜாக்கிரதையுள்ளவர் களாயிருங்கள் என்ற எச்சரிக்கையும் சேர்த்தே கொடுக்கப்பட்டிருக்கிறது.

### நமக்கு ஏன் தெளிந்த புத்தி அவசியமாயிருக்கிறது?

வானத்திலே ஒரு ஸ்திரீ அடையாளமாகக் காணப்பட்டாள். அதே வேளையில் ஒரு பெரிய வலுசர்ப்பமும் வானத்திலே காணப்பட்டது. அவள் பெற்ற ஆண்பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாதிருக்க வலு சர்ப்பமாகிய பிசாசானவன் போராடினான் என்று வெளி.12ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எனினும் மிகாவேலும் அவனது தூதர்களும் வலுசர்ப்பத்திற்கு விரோதமாக யுத்தம் செய்து மேற்கொண்டதால் ஆண்பிள்ளை சிங்காசனத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆகவே **சாத்தானும் அவனது சேனையும் சபைக்கு விரோதமாகக் கிரியை செய்கிறபடியினால் நாம் தெளிந்தபுத்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.** 1 பேது.5:8-ல் பிசாசு நம்முடைய எதிராளி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் விசுவாச ஜீவியத்திற்கு, பரிசுத்த ஜீவியத்திற்கு, ஜெய ஜீவியத்திற்கு எதிரான காரியங்கள், தேவனோடும், தேவ ஜனங்களோடும், சபையோடும், பரிசுத்தவான்களோடுமுள்ள அந்நியோன்ய ஐக்கியத்திற்கு விரோதமான காரியங்களை எப்பொழுதும் செய்வான். கண் களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை முதலியவற்றைக் கொண்டுவந்து நம்மை அடிமைப்படுத்த முயற்சிப்பான். மறைவான கண்ணிகளை வைத்து அதில் விழச்செய்யும்படியாகப் பிரயாசப்படுவான்.

ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கெதிராக கிரியை செய்வான். அவன் சும்மா இருப்பதில்லை. கெர்ச்சிக்கிற சிங்கம் போல் சுற்றிச் சுற்றி வருவான். **நம்முடைய எதிராளி நமக்கு விரோதமாகச் செயல்படுவதை அறிந்து அவற்றை மேற்கொள்ள நமக்குத் தெளிந்த புத்தி அவசியம். தேவனுடைய வசனங்களில் தெளிந்த புத்தி தேவை. ஆட்டுக்குட்டியானவர் சிந்திய இரத்தத்தில் சார்ந்துகொள்ள தெளிந்த புத்தி தேவை.** எவர்கள் தெளிந்தபுத்தி இல்லாமல் இருக்கிறார்களோ அவர்கள் எளிதாக அவனால் விழுங்கப்பட்டு போவார்கள். ஆகவே நாம் தெளிந்தபுத்தி உள்ளவர்களாக இருந்தால் தான் சத்துரு நம்மை விழுங்கவும், வஞ்சிக்கவும் மோசம்போக்கவும் முடியாது. தானியேல் தடைகளைப் பொருட்படுத்தாமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தான். எனவே சிங்கங்களால் அவனைச் சேதப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் சிங்கங்களின் வாய்களைத் தேவன் தமது தூதனை அனுப்பிக் கட்டிப் போட்டார். இதுபோல நாம் ஜெபிக்க ஜெபிக்க பிசாசின் வல்லமைகள் அழிக்கப் படுகிறது. நம்முடைய ஜெபத்தைக் கேட்டு தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து தமது தூதர்களையும் அனுப்பி நம்மைப் பாதுகாப்பார். எனவே நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து சாத்தானை எதிர்த்துப் போராட வேண்டும். சாத்தானுடைய நோக்கம் நம்முடைய விசுவாசத்தைப் பலவீனப்படுத்தி, பலவீனப்படுத்தி முடிவில் எளிதாக நம்மை அழித்துப் போட வேண்டும் என்பதுதான். **தெளிந்த புத்தி இருந்தால்தான் விசுவாசத்தில் உறுதியாயிருந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்க முடியும். விழிப்புள்ளவர்களாக, ஜாக்கிரதையுள்ளவர்களாக, விசுவாசத்தைக் காத்துக் கொண்டு பிசாசோடு யுத்தம் செய்வதற்கு தெளிந்த புத்தி தேவை.** வேதத்தை வாசிக்க, தியானிக்க, வேத வசனங்களை ஆராய்ச்சி செய்ய தெளிந்தபுத்தி தேவை. நாம் தீர்மானங்களை எடுக்க, அதை நிறைவேற்ற, பிரதிஷ்டையைப் பாதுகாத்துக் கொள்ள, பொருத்தனைகளை நிறைவேற்ற, உடன்படிக்கையின்படி ஜீவிக்க, உடன்படிக்கையை உடைத்துப் போடாமலிருக்க தெளிந்தபுத்தி தேவை. 2 தீமோ.4:5-ல் "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு" என்று எழுதப்பட்டுள்ளது.

### தெளிந்த புத்தி இல்லாததினால் என்ன சம்பவிக்கிறது?

மத்.25ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்பொழுது ஓர் எஜமான் தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு தாலந்துகளைக் கொடுத்து விட்டுச் சென்றான். அவனவனுடைய திராணிக்குத்தக்கதாக ஐந்து, இரண்டு, ஒன்று எனத் தாலந்துகள் கொடுக்கப்பட்டன. ஒரு தாலந்து பெற்றவன் ஏன் எனக்கு ஐந்து தாலந்து கொடுக்கப்படவில்லை என் மிஞ்சி எண்ணினான். ஆகவேதான் அந்த

ஒரு தாலந்தையும் பிரயோஜனப்படுத்தக் கிருபை இல்லாமல் போய்விட்டது. நம்மைப்பற்றிய உண்மையான நிலவரம் தெரியாமல் நம்முடைய திறமை, ஞானம், படிப்பு, அந்தஸ்து போன்ற எல்லாக் காரியங்களைப் பற்றி பெருமை யாக எண்ணக்கூடாது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், மற்றும் பக்தியுள்ள தீர்க்கதரிசிகள் மிகுந்த மனத்தாழ்மை உள்ளவர்களாக இருந்தனர். நாம் மனத்தாழ்மையுள்ளவர்களாக இருந்தால் தான் நாம் மற்றவர்களை மதிக்கிறவர்களாக இருப்போம். மனத்தாழ்மை இல்லையென்றால் மற்றவர்களை ஏளனமாகப் பேசுவோம். இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரை ஏற்றுக்கொள்ளாமல் அவமரியாதை செய்தனர். ஆனால் தேவன் அவர்களைப் புறக்கணித்து புறஜாதியாரான நம்மை அவருடைய இஸ்ரவேலராக, ஆவிக்குரிய யூதர் களாகத் தெரிந்து கொண்டார். கிறிஸ்துவின் மணவாட்டியாக, பரலோகத்தின், சீயோனின் பிரஜைகளாக, புதிய எருசலேம் பட்டணத்தை சுதந்தரிக்கிற வர்களாக நம்மைத் தெரிந்து கொண்டார். ஆகவே நாம் அந்த இஸ்ரவேல் புத்திரைப்போல் இருக்கக்கூடாது. நம்மைப் பார்க்கிலும் நாம் மற்றவர்களை மேன்மையாக நினைக்க வேண்டும். இதற்குத் தெளிந்த புத்தி தேவை. மாற்கு 5:15-ல் இயேசு கிறிஸ்து ஒரு மனிதனுக்குத் தெளிந்த புத்தியை உண்டாக்கினார். லேகியோனாகிய பிசாசு பிடித்திருந்தவன் கல்லறையில் வாசம் பண்ணி, கற்களினால் தன் சரீரத்தைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டினாலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒருவராலும் அவனை அடக்க முடிய வில்லை. ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனை அந்தப் பொல்லாத ஆவியிலிருந்து விடுதலையாக்கினார். அவன் புத்தி தெளிந்து, இயேசுவின் அருகில் உட்கார்ந்திருந்தான். இதைப் பார்த்தவுடன் அந்த ஜனங்களுக்கு மிகுந்த பயம் உண்டாகிற்று. இவ்வளவு பெரிய விடுதலையைப் பெற்று இயேசுவுடன்கூட அவன் இருப்பதைக் கண்டு அவர்கள் மிகுந்த சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும். ஆனால் அந்த ஜனங்களுக்கோ தெளிந்தபுத்தி இல்லை. அதனால்தான் அவர்கள் இயேசுவைப் பார்த்து நீர் எங்கள் எல்லை களிலேயே இருக்கக்கூடாது. போய்விடவேண்டும் என்றார்கள். தெளிந்தபுத்தி இல்லாததால் பன்றிகளின் கிரயம் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது. தெளிந்த புத்தி இல்லாதபடியினால் இயேசுகிறிஸ்து தரக்கூடிய நித்திய ஜீவனை விட அந்தப் பன்றிகளுடைய மாம்சத்தின் ருசியைத்தான் அவர்கள் முக்கிய மானதாகக் கருதினார்கள். தெளிந்தபுத்தி உள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருடைய ஆலோசனைகள், ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த அனுபவத்தில் நாம் ஜீவிப்போமாக.

**தெளிந்த புத்தியினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்**

எபே.1:17ல் பிதாவாகிய தேவனை அறிந்து கொள்ள நமக்குத் தெளிந்த புத்தி தேவை. பிதாவாகிய தேவனை அறிவது என்பது தேவன் நம்மைப் பற்றி வைத்துள்ள நித்திய நோக்கத்தை நாம் அறிந்து கொள்வதாகும். பிதாவாகிய தேவனை அறிய வேண்டுமானால் முதலாவது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்க வேண்டும் (யோவா.14:9). வேத வசனங்கள், சுவிசேஷ புத்தகங்களை வாசிப்பதின் மூலம் அவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ள முடியும். ஆனால் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு தனிப்பட்ட ஐக்கியம் தேவை. கிறிஸ்து நம் ஆத்தும மணவாளனாக இருக்கிறார். நாம் அவரது மணவாட்டியாக அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படப் போகிறோம். நமக்குத் தெளிந்தபுத்தி இருக்குமானால் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், எச்சரிக்கையுள்ள வர்களாகவும் இருப்போம். “எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, எல்லாம் பக்திவிருத்தியை உணடாக்காது. எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரம் உண்டு, ஆனால் ஒன்றுக்கும் அடிமைப்பட மாட்டேன்” என்று பரி.பவுல் கூறுகிறார். 2 தீமோ.1:7-ல் தெளிந்த புத்தியுள்ள ஆவி என்று சொல்லப்பட்டுள்ளது. தெளிந்தபுத்தியுள்ள ஆவி என்பது தெளிந்தபுத்தியோடு தீர்மானம் பண்ணுகிற ஆவி, தெளிந்தபுத்தியோடு பிரதிஷ்டை பண்ணுகிற ஆவி, தெளிந்த புத்தியோடு பொருத்தனை செய்கிற ஆவி, தெளிந்த புத்தியோடு கூட காரியங்களைச் சேர்த்துக் கொள்கிற ஆவி என்பதாகும். தெளிந்தபுத்தி நமக்கு இருந்தால் நாம் நீடிய பொறுமை உள்ளவர்களாக இருப்போம். எந்தக் காரியத்தையும் பதட்டப்படாமல் நிதானமாகச் செய்கிறவர்களாக இருப்போம். தெளிவான சிந்தனை உடையவர்களாக இருப்போம். பயத்தின் ஆவி அற்றவர் களாக இருப்போம். (சங்.19:8) தேவனுடைய வசனம் நம்முடைய மனக் கண்களைத் தெளிவிக்கிறதாக இருக்கிறது. நம்முடைய சிந்தையைப் புதுப்பித்து விடுகிறது. நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு கர்த்தருடைய சத்தியத்தை அறிய அறிய தெளிந்தபுத்தி வந்து விடுகிறது. தேவனுடைய வார்த்தை தெளிதேனைப் போன்றது. அது புத்தியைத் தெளிவிக்கிறது (1 பேது.1:13). இயேசுகிறிஸ்து வெளிப் படும்போது நமக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கை யுள்ளவர்களாக மாற்றுகிறது. ஏனென்றால் அவருடைய கிருபையினால் தான் நாம் மறுரூபமாக்கப்பட்டு அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட முடியும். எனவே நாம் ஒவ்வொரு நாளும் தெளிந்த புத்தி உள்ளவர்களாக ஜீவிப்போமாக.

---

**“அன்பை விளக்குவதை விட வெளிப்படுத்துவதே மேலானது. ஆண்டவரின் அன்பை நமது வாழ்வில் வெளிப்படுத்தவே அவர் நம்மை அவருடைய பிரதிநிதிகளாக வைத்திருக்கிறார்” - யாரோ.**

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805